செ. கு. எண்: 198

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 26.7.2013

பயிர் செழிக்க வளம் அருளும் காவேரி அன்னைக்கு நன்றி செலுத்தும் விதமாக நதிக்கரைகளிலும், ஆற்றங்கரைகளிலும் பதினெட்டாம் பெருக்கு விழா எனப்படும் ஆடிப்பெருக்கு விழா கொண்டாடப்படுவது வழக்கம்.

3.8.2013 அன்று வருகின்ற ஆடிப்பெருக்கு விழாவினை காவேரி நதிக் கரையில் உள்ள மக்கள் சீரோடும், சிறப்போடும் கொண்டாட ஏதுவாக, மேட்டூர் அணையிலிருந்து கூடுதலாக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று காவேரி பகுதி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

மேட்டூர் அணையில் உள்ள நீர் இருப்பு, நீர்வரத்து, தென்மேற்கு பருவமழையின் தீவிரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, ஆடிப்பெருக்கினை காவேரிப் பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் 27.7.2013 முதல் 2.8.2013 வரை மேட்டூர் அணையிலிருந்து, தற்போது குடிநீருக்காக திறந்துவிடப்பட்டுள்ள 3,000 கன அடி நீருடன், கூடுதலாக வினாடிக்கு 3,000 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9